# 12 ஆலயக் கிரியைகள்

கிரியை எனும் கலைச்சொல் நியதிச் செயல்கள் என்னும் கருத்தில் வழங்கி வருகின்றது. சடங்கு என்னும் சொல்லும் அதே பொருளைத் தருகின்றது. இந்நியதிச் செயல்கள் ஆலயக் கிரியைகள், வீட்டுக் கிரியைகள் என்னும் இரு பிரிவுகளைக் கொண்டது. பூசைகள், அபிஷேகங்கள் முதலானவை ஆலயக் கிரியைகளாகும். திருமணச் சடங்கு, பூப்பு நீராட்டு, ஷஷ்டியப் பூர்த்தி, அந்தியேட்டி முதலானவை வீட்டுக் கிரியைகளுள் அடங்கும்.

இவற்றுள் ஆலயக் கிரியைகள் பற்றி சிவாகமங்களும், உபாகமங்களும், பத்ததிகளும் விரித்துக் கூறுகின்றன. ஆலயக் கிரியைகள் என்னும் பிரிவில் அடங்கும் நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள், காமிகக் கிரியைகள் பற்றி நோக்குவோம்.

**(அ) நித்திய கிரியைகள்**

நித்திய கிரியை என்பது ஆலயத்தில் தினமும் நிகழும் நியதிச் செயல் ஆகும். நித்திய கிரியைகள் ஆலயங்களில் நிகழும்போது ஆவாகனம், அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, தோத்திரம், வாழ்த்து என்னும் நியதிகள் பின்பற்றப்படும். சிவாலயத்தின் வசதிக்கேற்ப பன்னிரு காலங்களிலோ, ஆறு காலங்களிலோ, மூன்று காலங்களிலோ, ஒரு வேளையோ நித்திய கிரியை நடைபெறுதல் வழக்கம். தமிழகத்தின் திருச்செந்தூரில் பன்னிருவேளைப் பூசைகள் இன்றும் நிகழ்த்தப்படுகின்றன. சில ஆலயங்களில் இருகாலப் பூசைகள், முக்காலப் பூசைகள் இடம் பெறுகின்றன.

**ஆறுகாலப் பூசை**

ஆலயங்களில் இடம்பெறும் ஆறுகாலப் பூசைகள் உஷக்காலப் பூசை, காலைச் சந்திப் பூசை, உச்சிக்காலப் பூசை, சாயரட்சைப் பூசை, இரண்டாங்காலப் பூசை, அர்த்தயாமப் பூசை ஆகியனவாகும்.

**1. உஷக்காலப் பூசை (அதிகாலைப் பூசை)**

சூரியன் உதிக்குமுன் மூன்றே முக்கால் நாழிகையின் முன் நடைபெறுவது உஷக்காலப் பூசை ஆகும். உஷக்காலப் பூசை, அதிவிடியற் பூசை என்றும் கூறப்படும். இப்பூசையைச் செய்யும் அர்ச்சகர் முதலில் தனது அனுஷ்டானங்களை முறைப்படி நிறைவேற்றுதல் வேண்டும். அடுத்து, ஆலயத்தினுள் பள்ளியறைத் திறவுகோலுடன் சென்று திருப்பள்ளி எழுச்சி பாடுதல் வேண்டும். நிர்மாலியங்களைக் களைந்து, இறைவனை எழுந்தருளச் செய்து, கருவறைக்கு எழுந்தருளி வந்திருக்கும் மூர்த்தியில் இருக்கும் இறைவனை உற்சவக் கிரியையால் மூலமூர்த்தியில் சேர்ப்பிக்க வேண்டும்.

**2. காலைச் சந்திப் பூசை (காலைப் பூசை)**

சூரியன் உதித்த பின் ஏழரை நாழிகைக்குள் நடைபெறும் பூசை காலைச் சந்திப் பூசையாகும். முதலில் சூரியனுக்குப் பூசை நடைபெறும். பின்னர், விநாயகர் பூசை, சிவலிங்கபூசை என்பனவும் தொடர்ந்து பரிவாரத் தெய்வங்களுக்கான பூசை, நித்தியபலி என்பனவும் காலைச் சந்திப் பூசையில் இடம்பெறும்.

**3. உச்சிக்காலப் பூசை (மதியப் பூசை)**

நண்பகலில் கிரமமாக நடைபெறும் பூசை, உச்சிக் காலப் பூசையாகும். முதலில் அர்ச்சகர் தமது நித்திய கடமைகளைச் செய்து முடித்தல், அது விக்னேஸ்வர பூசை தொடக்கம் சிவோகம் பாவனை வரையிலான பூர்வாங்கக் கிரியைகளை நிறைவேற்றல், பின் ஸ்நபன அபிஷேகம் செய்தல், அதன் பின் மூலமூர்த்திக்குரிய ஆவரண பூசை செய்து தூப தீப ஆராதனை செய்தல், பரிவாரத் தெய்வங்களுக்கான பூசைகள் நிறைவேறியதும் சிவநிர்மாலியத்தைச் சண்டேசுவரரிடம் சமர்ப்பித்து, பூசைசெய்தல் வேண்டும். இவை மத்தியானப் பூசையின் அங்கங்கள் ஆகும்.


இலவச விநியோகத்திற்காக

### 4. சாயரட்சைப் பூசை (சாயங் காலப் பூசை)

இப் பூசை சூரியன் மறைவதற்கு மூன்றே முக்கால் நாழிகைக்கு முன் நிகழ்வதாகும். அபிஷேகம் செய்த பின், விநாயகர் பூசை, சிவலிங்க பூசைசெய்தல், நடேசர், சிவபேதங்கள், அம்பாள் ஆகியோரை முறைப்படி பூசித்தல் என்பன சாயரட்சைப் பூசையின் முக்கிய அம்சங்கள் ஆகும். இப்பூசையை, **பிரதோஷகாலப்பூசை** என்றும் அழைப்பர்.

### 5. இரண்டாங்காலப் பூசை (மாலைப் பூசை)

இப்பூசை சாயங்காலப் பூசையின் பின், முன்றே முக்கால் நாழிகையில் அதாவது சூரிய அஸ்தமனத்தின்போது நிகழ்த்தப்படும். சிவாச்சாரியார், மாலையில் நீராடித் தூய கோலம் புனைந்து, முதலில் விநாயகர் பூசையைச் செய்தல் வேண்டும். பின்னர், துவாரபாலகர் பூசை நிகழ்த்தல், பஞ்சாவரண பூசை செய்தல், ஸ்நபனம் முதல் அருச்சனை வரையுள்ள பூசைக் கிரமத்தை நிறைவேற்றல், பரிவார தெய்வங்களுக்குரிய பூசையை நிறைவேற்றல், நித்தியோற்சவம், நித்திய பலி என்பவற்றை நிறைவேற்றிய பின் சண்டேசுவரர் பூசையை நிகழ்த்தல் வேண்டும். இரவின் முகம் எனப்படும் பிரதோஷ காலத்தின் பின் இரண்டாவதாக நிகழும் பூசையே இரண்டாங் காலப் பூசையாகும். இதனை இரவுப் பூசை எனவும் அழைப்பர்.

### 6. அர்த்தயாமப் பூசை (சாமப் பூசை)

இப்பூசை இரண்டாம் காலப் பூசையிலிருந்து, மூன்றே முக்கால் நாழிகை எல்லைக்குள் நிகழ வேண்டும். அபிஷேகம் தொடக்கம் தூப, தீபாராதனை வரையுள்ள நியதிகளை கிரமமாகச் செய்து பூசையை முடித்தல், பின் எழுந்தருளி மூர்த்தியை சிவிகையில் ஏற்றிப் பள்ளியறையில் தேவியோடு எழுந்தருளச் செய்தல், நிவேதனப் பொருள்களைச் சமர்ப்பித்து, திரையிட்ட பின் வெளியேறுதல், அடுத்து சண்டேசுவரர் பூசை நிகழ்தல், பின் ஆலயப் பாதுகாப்பை வைரவரிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைத்தல் என்பன இப்பூசையின் முக்கிய அம்சங்களாகும். நடுநிசிப் பூசை, நள்ளிரவுப் பூசை, சாமப் பூசை என்பன இதற்கு வழங்கும் வேறு பெயர்களாகும்.

### (ஆ) நைமித்திய கிரியைகள்

நித்திய பூசையில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் கிரியை இதுவாகும். ஒருவார, இருவார, ஒருமாத, சிலமாத, ஒரு வருட, பல வருட இடைவெளியின் பின் நிகழும் சம்பிரதாயபூர்வக் கிரியைகள் இதனுள் அடங்கும். சுக்கிரவார பூசை, சோமவார பூசை என்பவற்றை வாராந்தப் பூசைகள் எனலாம். பிரதோஷ விரத காலப் பூசை இருவாரத்திற்கு ஒருமுறை நிகழும் கிரியையாகும். மாதப்பிறப்பு, சதுர்த்தி ஆகிய விஷேட தினப் பூசைகள் மாதமொருமுறை நிகழ்வனமாகும். நடேசர் அபிஷேகங்கள் சில மாதங்களுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் ஓராண்டில் ஆறு முறை நிகழும் கிரியையாகும். தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்தரம் முதலியனவும் ஆலயங்களில் இடம்பெறும் பிரமோற்சவமும் வருடமொருமுறை நிகழும் பெருங் கிரியைகள் ஆகும். கும்பாபிஷேகம் பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை நிகழும் கிரியையாகும். மேலும், தநுர் மாத பூசை, தீப பூசை போன்ற பல நைமித்திய கிரியைகள் பற்றிய விரிவான தகவல்கள் பூர்வகாரணாகமம், உத்தரகாரணாகமம் ஆகிய பிரமாண நூல்களில் கூறப்பட்டுள்ளன.

### மகோற்சவக் கிரியை விளக்கம்

நைமித்தியக் கிரியைகளில் தலைசிறந்ததாகக் கொள்ளப்படுவது மகோற்சவக் கிரியையாகும். மகோற்சவம் மகா உற்சவம் எனவும் மேலான பெரிய உற்சவம் எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. நித்திய கிரியைகளின் போது ஏற்படும் குற்றம் குறைகளுக்குப் பிராயச்சித்தமாக மகோற்சவக் கிரியைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



இலவச விநியோகத்திற்காக

### மகோற்சவக் கிரியை ஒழுங்குமுறைகளும் அவற்றின் தத்துவ விளக்கமும்

மகோற்சவக் கிரியையில் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, கொடியேற்றம், தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. உற்சவத்தின் ஆரம்பத்தில் கிராமம் நன்மை பெறுவதற்காக வைரவருக்கு விசேட பூசை செய்தல் **கிராமசாந்தி** எனப்படும். மகோற்சவக் கிரியைகள் இறைவனின் ஐந்தொழில்களை நினைவூட்டுகின்றது.

இறைவனின் தடத்த லட்சணங்களை உணர்த்தலும் ஆன்மாவைப் பீடித்துள்ள அவித்தைகளை நீக்கவும், நன்றியுணர்வுடன் இறைவனைப் பூசிக்கவேண்டும் என்பதை உணர்த்தலும் மகோற்சவக் கிரியைகளின் உட்பொருளாகும்.

### மகோற்சவமும் சமூகமும்

மகோற்சவங்கள் ஊர் மக்களை ஒன்று சேர்த்து, அவர்களிடையே பரஸ்பர உறவினையும் ஒருமைப்பாட்டினையும் விருத்தி செய்கின்றன. மக்கள் மனத்திலே நற்பண்புகள் விருத்தி அடைகின்றன. சொந்தக் கவலைகளை மறந்து அமைதி மிக்கதோர் புத்துலகில் அவர்களை வாழச் செய்கின்றன. இறைவனைச் சிறப்பான முறையில் தோத்தரிப்பதற்கும் இறைபக்தியை வளர்ப்பதற்கும் ஆலயத்தின் மகிமையைப் போற்றவும் கலைகளைப் பேணவும் பிரதேச நலன், நாட்டு நலன் என்பவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் உதவுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, மகோற்சவங்கள் மனிதருள் ஆன்மீக உணர்வை வளர்க்கின்றன.

### (இ) காமிகக் கிரியைகள்

ஆலயக் கிரியைகளில் இதுவும் ஒன்றாகும். இக் கிரியை இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன நிஷ்காமிகக் கிரியை, காமிகக் கிரியை என அழைக்கப்படும். நிஷ்காமிகக் கிரியை என்பது பயன் ஏதும் கருதாமல் நிகழ்த்தப்படுவது. காமிகக் கிரியை என்பது எதாவது ஒரு பலனை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுவதாகும்.

### 01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஆலயக்கிரியைகளில் உள்ள பிரிவுகளைக் குறிப்பிடுக.
2. ஆலயக் கிரியைகள் பற்றிக் கூறும் நூல்கள் எவை?
3. நித்திய கிரியை என்றால் என்ன?
4. நைமித்திய கிரியை செய்வதன் நோக்கம் யாது?
5. மகோற்சவம் என்பதன் பொருள் யாது?

### செயற்பாடு

1. நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள் ஆலயத்திய நடைபெறும்போது சென்று அவதானிக்குக. அதன் விளக்கங்களை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- ஆலயக்கிரியைகளை நித்திய, நைமித்திய, காமிகக் கிரியை என மூவகைப்படுத்தலாம்.
- ஆலயத்தில் தினமும் நிகழும் பூசை நித்திய பூசை எனப்படும்.
- நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவமும் அடங்கும்.
- காமிகக் கிரியைகள் பலனை நோக்காகக் கொண்டு செய்யப்படுவதாகும்.


இலவச விநியோகத்திற்காக